[வலைப்பின்னல் மாற்றுமுறை]

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## *1999 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, கடன் இணக்க (திருத்தச்) சட்டம்*

*(1999, ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1999, செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** *குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 5.25** **தபாற் செலவு: ரூபா 3.50**

## *1999 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, கடன் இணக்க (திருத்தச்) சட்டம்*

[*1999 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*]

*ச.வ. ஓ. 22/97*

### கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற் கானதொருசட்டம்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:*

**1.** *இச்சட்டம் 1999 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, கடன் இணக்க (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.* *சுருக்கப் பெயர்.*

**2.** *(இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (81 ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் 19அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-* *(81 ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் 19அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

*(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன் மூலம் :-*

*"(1அ) இக்கட்டளைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஈடொன்று என்ற வகையில் அசைவற்ற ஆதனத்தின் ஏதேனும் அத்தகைய அறுதியின் மூலம் பெறப்பட்டதாகக் கருதப்பட்ட கடன் ஒன்று தொடர்பில் கடன் பெறுநர் அல்லது கடன் தருநர் ஒருவரால் செய்யப்படும் ஏதேனும் விண்ணப்பத்தை சபையானது, அத்தகைய விண்ணப்பம், அத்தகைய அறுதியைப் பயனுறுத்தும் நொத்தாரிசியலின்படி நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் செய்யப்பட்டாலன்றி, கவனத்திற் கொள்ளுதல் ஆகாது.*

*ஆயினும், இவ்வுட்பிரிவிலுள்ள எதுவும், இவ்வுட் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியின் பின்னர், அறுதிமாற்றப்பட்ட ஆதனத்தை ஆட்சியுடமை கொண்டுள்ள கடன்பெறுநர் ஒருவரால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றைக் கவனத்திற் கொள்வதினின்று சபையைத் தடைசெய்வதாக வாசித்துப் பொருள்கொள்ளுதல் ஆகாது ;";*
*அத்துடன்*

*(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "(1) ஆம் உட்பிரிவு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "(1) ஆம் உட்பிரிவு அல்லது (1அ) என்னும் உட்பிரிவு" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.*

*முதன்மைச் சட்ட வாக்கத்தின் 19ஆ என்னும்பிரிவைத் திருத்துதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆ என்னும் பிரிவு "அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கு அல்லது (1அ) என்னும் உட்பிரிவுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

*முதன்மைச் சட்ட வாக்கத்தின் 21அ என்னும்பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவுக்கு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலம் ;

(2) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில் -

(அ) "இச்சட்டத்தின் கீழான ஏதேனும் வழக்கு நடவடிக் கைகளில்" சொற்களிலிருந்து "கருத்திற்கொள்ளுதல் வேண்டும்" என்பது வரையிலான எல்லாச் சொற்களையும் நீக்கி விட்டு, அவற்றிற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன் மூலமும்

"அசைவற்ற ஆதனத்தின் அறுதி அல்லது நிபந்தனைக்குரிய அறுதியொன்று தொடர் பிலான விண்ணப்பமொன்று தொடர்பாக இக்கட்டளைச் சட்டத்தின்கீழான எவையேனும் வழக்கு நடவடி ககைகளில், சபையானது, (70 ஆம் அத்தியாயமான) மோசடிகள் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவில் அல்லது (14 ஆம் அத்தியாயமான) சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 91 ஆம், 92 ஆம் பிரிவுகளில் முரணானது எது எவ்வாறிருப்பினும் அத்தகைய அறுதி அல்லது நிபந்தனைக்குரிய அறுதி உண்மையிலேயே ஈடொன்றாகுமா எனத் தீர்மானிக்கும் நோக்கத்திற்கு விடயத்தின் எல்லாச் சூழ்நிலை களையும் அத்துடன் குறிப்பாகப் பின்வரும் விடயங்களையும் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்:-" ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "சட்டரீதியில் வலுவுக்கிடற்பாலதான உடன் படிக்கையொன்று" என்றும் சொற்களுக்குப் பதிலாக, "எத்தன்மையானதுமான ஏதேனும் உடன்படிக்கை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) உட்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(2) அசைவற்ற ஆதனமொன்றின் அறுதிமாற்றம் உண்மையில் ஈடொன்றாகும் என்பதைக் காண்பிப்பதற்கான சான்றை முன்வைக்கும் பொறுப்பு அறுதி மாற்று பவருடையதாதல் வேண்டும்."

*முதன்மைச் சட்ட வாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் :-

"சபையானது விண்ணப்பத்தை அது கடன் தருநருக்கு வருமதியான" என்பதிலிருந்து "என்பது டன் அது" என்பது வரையிலான எல்லா சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாக, "சபையானது, அது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்ட வாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இததால் திருத்தப்படுகின்றது :-

"(ஆ) வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், கடன்தருநர் ஒருவருக்கு, விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்திற் கொண்டு, நியாயமானதென சபைக்குத் தோன்றக் கூடியவாறான அத்தகைய பணத்தொகை வட்டியாக அனுமதிக்கப்படுதல் வெண்டும் ;"

*முதன்மைச் சட்ட வாக்கத்தின் 39 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "அத்தகைய தோதான கட்டளையை ஆக்கலாம்" என்றும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய தோதான கட்டளையை ஆக்குதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்ட வாக்கத்தின் 64 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) "கடன் தருநர்" என்பதன் வரைவிலக்கணத்தில், "அசைவற்ற ஆதனத்தின் நிபந்தனைக்குரிய அறுதி மாற்றமொன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அசைவற்ற ஆதனத்தின் அறுதிமாற்றம் அல்லது நிபந்தனைக்குரிய அறுதிமாற்றம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் அத்துடன்

(2) "ஈடு" என்பதன் வரைவிலக்கணத்தில் "அத்தகைய ஆதனத்தின் ஏதேனும் நிபந்தனைக்குரிய அறுதி மாற்றம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய ஆதனத்தின் ஏதேனும் அறுதி மாற்றம் அல்லது நிபந்தனைக்குரிய அறுதி மாற்றம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**9**. இச்சட்டத்தின் தமிழ் உரைக்கும் சிங்கள உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*